www.boomiirjt.com Samoogathil Kaimpengal Special Issue 23 June 2026

BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893 An international open access, peer- reviewed, refereed journal

# கைம்பெண்கள் அன்றும் இன்றும்

**பன்னீர் செல்வம் மா**

முனைவர்பட்ட ஆய்வாளர், கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்ட வளாகம், திருவனந்தபுரம், கேரளா, இந்தியா, மின்னஞ்சல்: pankumari2001@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

"கைம்பெண்கள் அன்றும் இன்றும்" என்ற இக்கட்டுரையில், சங்க காலம் முதல் தற்காலம் வரை கைம்பெண்களின் சமூக நிலை, வாழ்க்கைச் சூழல் மற்றும் அவர்களுக்குக் கிடைத்த உரிமைகள் ஆகியவற்றையும், அரசு அவர்களுக்கு செய்த நலத்திட்டங்கள் பற்றியும், ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்த கைம்பெண்கள் இன்று பல துறைகளில் முன்னேறி வந்தாலும், சமூகப் பார்வை மற்றும் சில மரபுசார்ந்த தடைகள் இன்னும் முழுமையாக நீங்கவில்லை என்பதும் கண்டறியப்படுகிறது. எனவே, கைம்பெண்களின் முழுமையான முன்னேற்றத்திற்கும், அவர்களின் நிலை மேம்படுவதற்கும் சமூக அக்கறையும் சமத்துவ மனப்பான்மையும் அவசியம் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

**திறவுச்சொற்கள்**

கைம்பெண், உடன்கட்டை, மறுமணம், சமூகச் சிக்கல், பாலின சமத்துவமின்மை, அரசுத் திட்டங்கள், விழிப்புணர்வு, ஆளில் பெண்டிர், கழிகல மகளிர், தொடிகழி மகளிர்

## முன்னுரை

கணவனை இழந்த பெண்களை கைம்பெண்கள், விதவைகள் என்று அழைக்கிறோம். கைம்பெண்களின் வாழ்க்கை என்பது வெறும் தனிப்பட்ட இழப்பின் கதை மட்டுமல்ல; அது சமூகத்தின் ஆணாதிக்கக் கட்டமைப்புகளையும் பாலினப் பாகுபாடுகளையும் வெளிப்படுத்தும் ஒரு சமூக வரலாறாகும். கணவனை இழந்த பெண், தன் அடையாளம், சுதந்திரம் மற்றும் சமூக அங்கீகாரத்திற்காகப் போராட வேண்டிய நிலை பல காலங்களாக இருந்து வந்துள்ளது என்பது நாம் அறிந்ததே. தமிழ்ச் சமூகத்திலும் உலகின் பல சமூகங்களிலும் கைம்பெண்கள் பல்வேறு கட்டுப்பாடுகள், அவமதிப்புகள் மற்றும் ஒதுக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அவர்களின் உடை, உணவு, சமூகப் பங்கேற்பு மற்றும் மறுமணம் போன்றவற்றில் கூட சமூகத் தடைகள் விதிக்கப்பட்டன.

ஒரு ஆண் தனது மனைவியை இழந்தால் சாதாரண வாழ்க்கையைத் தொடர அனுமதிக்கப்படுகிறான். ஆனால் ஒரு பெண் கணவனை இழந்தால் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகிறாள். இதிலிருந்து நமது சமூகத்தின் பாலின பாகுபாடு நமக்கு நன்கு புலப்படுகிறது. இறுதியாக நடத்தப்பட்ட, 2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 5.5 கோடி கைம்பெண்கள் இருக்கிறார்கள்; தமிழகத்தில் 41 லட்சம் கைம்பெண்கள் இருக்கின்றனர். இவ்வளவு எண்ணிக்கையில் இருக்கின்ற கைம்பெண்களுக்கும் ஆதரவற்ற பெண்களுக்கும் மத்திய, மாநில அரசுகள் செய்ய வேண்டிய ஆக்கப்பூர்வமான பணிகள் ஏராளமாக இருக்கின்றன.

**இலக்கியங்களில் கைம்பெண்கள்**

கூந்தலை மொட்டையடித்து, பூ, அணிகலன்கள் முதலியனவற்றைத் துறந்து, நீர்ச்சோற்றையும் புல்லரிசிச் சோற்றையும் உண்டு, பாயையும் தலையணையையும் நீக்கிப் பருக்கைக் கற்கள் நிறைந்த தரையில் படுத்து உறங்கும் வாழ்க்கையே கைம்மை நோன்பு ஆகும். இந்த கைம்மை நோன்பு எடுக்க விருப்பமில்லாதவர்கள் கணவன் இறந்த பின்னர் உடன்கட்டை (சதி) ஏறி தன் உயிரை நீத்துள்ளனர். சான்றாக பூதப்பண்டியன் இறந்தவுடன் அவன் மனைவி பெருங்கோப்பெண்டு தீக்குள் புக நின்றதையும், சான்றோர்கள் அவளைத் தடுத்ததையும் புறநானூறில் (246) காண்கிறோம். உடன்கட்டை ஏறுதல் நம் தமிழர் பண்பாடு அல்ல. ஏனெனில் நம் பண்பாடாக இருந்திருந்தால் சான்றோர்கள் பெருங்கோப்பெண்டைத் தடுத்திருக்கமாட்டார்கள். அவளை ஆதரித்திருப்பார்கள். இதிலிருந்து உடன்கட்டை ஏறுதல் அந்நியரிடமிருந்து வந்தது என்பதை அறியலாம்.

பிற்காலத்தில் உடன்கட்டை ஏறுதல் கட்டாயமாக்கப்பட்டதை வரலாற்று செய்திகள் மூலம் அறிய முடிகிறது. விதவைகளுக்கு சொத்துரிமை இல்லை என்பதால், இறந்த கணவரின் சொத்துக்களை அபகரிக்கும் பொருட்டு உறவினர்களால் உடன்கட்டை ஏறுதல் பெரும்பாலும் நடந்தேறியுள்ளது. அக்காலங்களில் கைம்பெண்களுக்கு மறுமணம் செய்ய உரிமை இல்லை, சொத்துரிமை இல்லை, குடும்பத்தில் முடிவுகளை எடுக்க உரிமை இல்லை, ஆண்களுக்கு நிகரான உரிமை இல்லை, ஏன் சாதாரண பெண்களுக்கு இருக்கும் உரிமைகள் கூட கிடையாது. ஆனால் ஆண்களுக்கு அப்படியல்ல; மனைவி இறந்ததும் அவர்கள் இறக்க வேண்டாம்; கைம்மை நோன்பு எடுக்க வேண்டாம். தனது மன விருப்பத்தின் படி இருக்கலாம். கைம்பெண்களுக்கு இது விதிவிலக்காகும். இதுவே அக்கால கைம்பெண்களின் நிலை.

கணவனை இழந்த மகளிர், தன் குடும்ப பொருளாதாரத்தை ஈடு செய்ய நெசவுத் தொழிலை வீட்டிலிருந்தே மேற்கொண்டுள்ளனர். இவர்களைப் 'பருத்திப் பெண்டிர்' என்று இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. ஆடை நெய்யப் பயன்படும் பருத்தியை வில்லாலடித்து அதிலுள்ள கொட்டையையும், சொத்தைகளையும் நீக்கி சுத்தம் செய்வர் (நற் 247,299; புறம் 326). ஆளில் பெண்டிர் (தன்னை ஆள்பவன் இல்லாத பெண்கள் - நற்.353), கழிகல மகளிர் (நகைகளைக் கழற்றிவிட்ட பெண்கள் - புறம்,280), பருத்திப்பெண்டிர் (நெசவுத் தொழில் செய்யும் பெண்கள் - புறம்.125), தொடிகழி மகளிர் (அணிகளைக் கழற்றிவிட்ட பெண்கள் - புறம்.238), கைம்மை (கைம்மை நோன்பு எடுக்கும் பெண்கள் - புறம். 125, 261), படிவ மகளிர் (துறவுநிலை பெண்கள் - நற்.272), உயவற் மகளிர் (துயரம் நிறைந்த பெண்கள் - புறம்.246) என்ற ஏழு பெயர்களில் கைம்பெண்கள் அறியப்படுகின்றனர்.

மணிமேகலை, 1. கணவனுடன் தீயில் மூழ்கி இறப்பவர், 2. தனியே தீ வளர்த்து அதில் வீழ்ந்து இறப்பவர், 3. கைம்மை நோன்பு எடுப்பவர் என்று பத்தினிப்பெண்களை மூன்று வகையாகப் பிரிக்கிறது. இவ்வாறு காப்பியமே கூறும்போது மக்களின் மன நிலை என்னவாக இருந்திருக்கும். புராணங்கள் தொடங்கி சங்க இலக்கியங்கள், கதைப்பாடல்கள், நாவல்கள், சிறுகதைகள் போன்றவை கைம்பெண்கள் எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கக் கூடாது, என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது, அவர்கள் எப்படி வாழ்ந்துள்ளனர், சமூகத்தில் அவர்களின் நிலை எப்படி இருந்தது, சமூகம் அவர்களுக்கு எந்த இடம் கொடுத்தது என்பதை நம் கண் முன்னால் காட்டுகிறது. வரலாறுகளை எடுத்து பார்த்தால் பெண்களின் நிலைமை மோசமாக இருந்துள்ளது. அதிலும் கைம்பெண்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருந்துள்ளதை நம்மால் காணமுடியும். *"சோழர்கள் ஆட்சியில் குடும்ப சொத்தில் பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டது. உடன்கட்டையேறும் வழக்கம் தமிழகத்தில் புகுந்திருந்தது"* என்று வே. தி. செல்லம் (306) கூறுகிறார். வே. தி. செல்லமும், உடன்கட்டை தமிழர் மரபு இல்லை என்று கூறுவது இதிலிருந்து தெரிகிறது.

11- ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு சில இடங்களில், சில சமூகங்களில் மட்டும் தலையை மொட்டையடித்து முந்தானையால் தலையை முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்று கைம்பெண்கள் வற்புறுத்தப்பட்டிருப்பது தெரிகிறது (சிவ. முருகேசன், 50). விசய நகர மன்னர்கள் (13- ம் நூ) காலகட்டத்தில் *“உடன்கட்டை ஏறாதவர்களின் தலைமுடியை நீக்குதல் கட்டாயமாயிற்று. விதவைகளின் வாழ்வு அவலமாகவிருந்தது”* (அ. தட்சிணாமூர்த்தி, 472). இப்படி ஒவ்வொரு அரசர்களின் காலகட்டத்திலும் கைம்பெண்களின் நிலை மிகவும் மோசமாகவும் பரிதாபகரமாகவும் இருந்திருக்கிறது என்று இச்சான்றுகளின் மூலம் நமக்கு நன்றாகவே தெரிகிறது.

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் ஆட்சி செய்த காலகட்டமான 1856 இல் *‘இந்து விதவைகள் மறுமணம்’* சட்டமாக இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் 1856 டிசம்பர் 7 இல் வங்காளத்தில் முதன் முதலாக விதவை மறுமணம் நடத்தப்பட்டது. மறுமணம் செய்துகொள்ளும் பெண் தன் முதல் கணவன் மூலமாகப் பெற்ற சொத்துரிமையை இழக்கவும் செய்தது. இது, அவள் தன் கற்பு நிலையை மீறினாள் என்பதற்கான தண்டனையாகவே வழங்கப்பட்டது. இப்படி கணவன் சொத்துரிமையை இழக்கும் மறுமண முறை சிறுபான்மையான மேல்மட்டத்தினருக்காக சட்டப்படி ஏற்கப்பட்டது. இதனால், மறுமணம் என்ற உரிமையை எந்த இழப்பும் இல்லாமல் அனுபவித்துவந்த பெரும்பாலான கீழ்மட்ட பெண்கள் இச்சட்டப்படி தங்கள் சொத்துரிமையை இழந்தனர்.

சென்னை மாகாணத்தில் விதவைகள் மறுமணத்துக்கு பலத்த ஆதரவு இருந்தது. 1898 இல் வீரேசலிங்கம் பந்துலு என்பவர், சென்னையில் விதவைகள் காப்பகம் ஒன்றைத் தொடங்கினார். அதை முன் உதாரணமாகக் கொண்டு சென்னை மாகாண அரசு 1903 இல் இந்து மற்றும் முஸ்லீம் விதவைகளுக்குக் கல்வி வழங்கும் நோக்கத்துடன் நிதி உதவி வழங்கும் திட்டம் ஒன்றை அறிவித்தது. இப்படி முன்னெடுப்புகள் எடுத்தபோதிலும் முழுமையான தீர்வு கிடைக்கவில்லை.

உத்தரப்பிரதேசம் மதுரா மாவட்டத்தில் ஆதரவற்ற *‘விதவைப் பெண்களுக்கான மறுவாழ்வு இல்லம்’ 2006* ஆம் ஆண்டு உ.பி. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது. பின்னர் விருந்தாவன் *‘அகிலா பாரதிய மாசாரதா சமாஜ் கல்யாண் சமிதி’* என்ற அரசு சாராத அமைப்பால் நிர்வகிக்கப்பட்டது. இந்த காப்பகத்தில் விதவைப் பெண்கள் மரணமடைந்தால் அவர்களை அடக்கம் செய்ய அந்த அரசு சாரா அமைப்பு மறுத்துவிட்டதால், மரணமடையும் “விதவைகளின்” சடலம் குப்பை எடுப்பவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. அவர்களோ துண்டு துண்டுகளாக வெட்டி சணல் சாக்குகளில் திணித்துத் தூக்கி எறிந்துள்ளனர். சாக்கில் மூட்டை கட்டிப் போடப்பட்டுள்ள இந்தப் பெண்களின் உடல்கள் பணம் தந்தால்தான் அங்கிருந்து எடுக்கப்படும் நிலை இருந்திருக்கிறது என்ற செய்தியைக் கேட்கும் போது கைம்பெண்கள் நிலை எவ்வளவு பரிதாபகரமாக இருந்திருக்கிறது என்று தெரிகிறது.

மாவட்ட சட்ட சேவை ஆணையகம் நேரில் ஆய்வு நடத்தியபோது இந்த அதிர்ச்சியான உண்மைகள் வெளிவந்துள்ளன. இதிலிருந்து கைம்பெண்களின் நிலை எவ்வாறு இருந்திருக்கிறது என்பது வெளிப்படையாக நமக்குத் தெரிகிறது. பெண்களுக்குக் கணவனுடைய சொத்திலும் பெற்றோர் சொத்திலும் உரிமை இல்லாத காரணத்தால், கணவனாலும் பெற்றோர்களாலும் ஆதரிக்காமல் விடப்பட்டவர்கள் தன் பொருளாதார தேவைக்காக வேறு வழியின்றி ‘விபசார’ வாழ்க்கையையே கைக்கொள்ளும்படி நேருகின்றது என்று *‘விபச்சாரம் ஒழியுமா?’* என்ற கட்டுரையில் பெரியார் கூறியிருப்பது, அவர் வாழ்ந்த காலத்தில் கைம்பெண்களின் அவல நிலையை எடுத்துரைக்கிறது. விதவைகளின் நகரம் டெல்லியிலிருந்து 145 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் பிருந்தாவனம் நகரம் *“விதவைகளின் நகரம்”* என்று அழைக்கப்படுகிறது. இவ்விடத்தில் இப்போதும் 15,000 விதவை பெண்கள் கிருஷ்ணரை வணங்கிக் கொண்டும், மோட்சத்தை எதிர்பார்த்தும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர் என்ற செய்தியைக் கேட்கும்போது நம் நாடு எங்கு சென்றுகொண்டிருக்கிறது என யோசிக்கத் தூண்டுகிறது.

**அரசின் பல்வேறு திட்டங்கள்**

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு திட்டம் (1975) மூலம் பட்டதாரி விதவைப் பெண்களுக்கு ரூபாய் 30,000-க்கான காசோலையும், ரூபாய் 20,000-க்கு தேசிய சேமிப்பு பத்திரமும், தாலிக்கு 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. படிக்காத விதவைப் பெண் என்றால் ரூபாய் 15,000-க்கான காசோலையும், ரூபாய் 10,000-க்கு தேசிய சேமிப்பு பத்திரமும், தாலிக்கு 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சராசரியாக 150 முதல் 200 வரையிலான கைம்பெண்கள் நிதியுதவி மற்றும் தங்கம் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

ஆதரவற்ற விதவை ஓய்வூதியம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட விதவைகளுக்கு மாதந்தோறும் ரூ.1,200 ஓய்வூதியமாக மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படுகிறது.

இந்திரா காந்தி தேசிய விதவை ஓய்வூதியத் திட்டம் (IGNWPS – 2009), தேசிய குடும்ப நலத் திட்டம் (NFBS – 1995), ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவுத் திட்டம் மூலம், ஏழை விதவைத் தாய்மார்களின் பெண் குழந்தைகளின் திருமணத்திற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

2021, செப்டம்பர் மாதத்தில் தமிழக அரசு, *‘கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்’* அமைத்து அரசாணை வெளியிட்டது. தமிழகத்தில் வாழும் கைம்பெண்களும் பிற ஆதரவற்ற பெண்களும் முன்வைத்த நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையில் இந்த நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் (Widow Destitute Women Welfare Board – 2022) பெண்களுக்கான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் பயிற்சிகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே இதன் முக்கிய நோக்கமாகும். இப்படி பல திட்டங்களை அரசு செய்து வருவது பாராட்டத்தக்கது. இக்காலகட்டத்திற்கேற்ப இன்னும் பல திட்டங்களை அரசு முன்னெடுத்துச் செய்தால் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். எதிர்காலத்தில் இன்னும் பல திட்டங்களை அரசு செய்யும் வாய்ப்பு உள்ளது.

வெகுசன மக்கள் விரும்பி பார்ப்பது திரைப்படங்களையும், ஊடகங்களையும் தான். எம்.ஆர்.ராதாவின் ‘ரத்தக்கண்ணீர்’ (1954) தொடங்கி விசுவின் ‘சகலகலா சம்பந்தி’ (1989), தாலி புதுசு (1997), ரிதம் (2000) உட்படப் பழைய திரைப்படங்களில் கைம்பெண் மறுமணம் ஒரு புரட்சிகரமான சமூக மாற்றமாக பேசப்பட்டது. இன்றைய சமகாலத் தமிழ் திரைத்துறையிலும், ஊடகங்களிலும் விதவை மறுமணம் என்பது ஒரு தனிப் பெரும் கதையாக இல்லாமல், சமூகத்தின் இயல்பாகக் காட்டப்பட்டு வருகிறது. இவ்வாறாக சினிமாவும், ஊடகங்களும் பிற பெண்களைப் போலவே கைம்பெண்களைக் காட்டி சமூகத்தில் அவர்களின் மதிப்பை உயர்த்துவது மகிழ்ச்சியை அளிக்கிறது.

செகண்ட் மேரேஜ் (Second Marriage - YouTube Series): 'நரிக்கூட்டம்' (Tamada Media) போன்ற யூடியூப் சேனல்களில் வெளிவந்த குறும்படங்கள் மற்றும் தொடர்களில், கணவனை இழந்த அல்லது விவாகரத்தான ஒரு பெண் சமூகத் தடைகளைத் தாண்டி தனது இரண்டாவது வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள எதார்த்தமான சிக்கல்களையும், அதற்கு குடும்பத்தினர் எப்படி ஆதரவாக நிற்க வேண்டும் என்பதையும் எதார்த்தமான நகைச்சுவையுடனும், உணர்ச்சிப்பூர்வமாகவும் காட்டியுள்ளனர்.

தொலைக்காட்சித் தொடர்கள் (TV Serials): 'பாக்கியலட்சுமி', 'ஈரமான ரோஜாவே' போன்ற மெகா தொடர்களில் கணவனை இழந்த துணைக் கதாபாத்திரங்களுக்கு (அல்லது நாயகிக்கு) மறுமணம் செய்து வைப்பதை ஒரு முக்கியத் திருப்பமாக மாற்றி, குடும்பங்கள் மத்தியில் இதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

**முடிவுரை**

அரசு பொருளாதார ரீதியில் பலவிதமான திட்டங்களை அறிவித்து உதவிகளை செய்தாலும், சமூகத்தில் அவர்களைக் குறித்ததான அவமதிப்புகளையும் மக்களின் தவறான புரிதல்களையும் மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கணவன் இறந்த பிறகு பொது நிகழ்வுகளில் சுதந்திரமாகக் கலந்துகொள்ளும் உரிமையைப் பெரும்பாலும் இழந்துவிடுகிறார்கள். அவர்கள் நல்ல உடை உடுத்துவதும், அலங்காரங்கள் செய்வதும் தவறாகவே பார்க்கப்படுகிறது. காலையில், அவர் முகத்தில் விழித்தால் எந்த நல்ல செயலும் நடக்காது என்கிற நம்பிக்கைகள் இன்றைக்கும் பல மக்கள் மத்தியில் உள்ளது வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

மேலும், சமூகத் தளத்தில் பலரின் பழிச்சொல்லுக்கும் வசைபாடலுக்கும் ஆளாகின்றனர். அரசின் நலத்திட்டங்களும் சுயதொழில் வாய்ப்புகளும் மட்டுமே அவர்களுக்கான ஆதரவாக விளங்குகின்றன. கர்நாடகாவிலுள்ள மங்களூரில் இறந்துவிட்ட இரண்டு குருக்களின் விதவை மனைவியர் கடவுளுக்கு வழிபாடு நடத்தும் உண்மை நிகழ்வு நடந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிகழ்வுகளைப் பார்த்தாவது சமூகம் தங்களது பழைய மூட நம்பிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இன்னும் பல கிராமங்களில் கைம்பெண்களை ஒதுக்கி வைக்கும் வழக்கம் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் வாழ்க்கை எல்லா நிலைகளிலும் மேம்பட வேண்டுமென்றால், இவர்கள் மாண்புடனும் மதிப்புடனும் சமூகத்தில் வாழ வேண்டும் என்றால், அரசு அமைத்திருக்கின்ற புதிய நல வாரியமும் ஏற்கெனவே அறிவித்திருக்கின்ற பல செயல்திட்டங்களும் மட்டும் போதாது. இன்னும் பல முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

கைம்பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்கொடுமைகளுக்குச் சரியான தண்டனையைக் கொடுக்க வேண்டும். அரசு ஏற்கனவே கைம்பெண்களுக்கென்று உள்ள சட்டங்களில் அதிக கவனம் செலுத்தி, தனது மேற்பார்வையின் கீழ் கவனித்துக் கொள்ள வேண்டும். விதவைகளை இரக்கத்திற்குரியவர்களாக அல்லாமல், சம உரிமைகளும் சுயமரியாதையும் கொண்ட மனிதர்களாகக் கருதும் மனப்பான்மை சமூகத்தில் வளர வேண்டும். அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கான கல்வி, பொருளாதார வாய்ப்புகள் மற்றும் சமூக ஆதரவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று கைம்பெண்கள் குறித்ததான விழிப்புணர்வு முகாம் நடத்தினால் கடைக்கோடி மக்களையும் கவனப்படுத்தும். திரைத்துறை, ஊடகங்களில் மட்டுமல்ல இதழ்களிலும், பாடத்திட்டங்களிலும் கைம்பெண்கள் பற்றிக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். தற்போது சிலர் கைம்பெண்களுக்காக புலனத்தில் (Whatsapp) பல குழுக்களை உருவாக்கி அவர்களுக்குத் தேவையான விழிப்புணர்வையும், ஆறுதல்களையும் கொடுத்து வருவது பாராட்டத்தக்கது. கைம்பெண்கள் மறுவாழ்வு என்பது அரசு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் மட்டுமல்ல; திரைத்துறை, ஊடகங்கள், சமூகம் மற்றும் ஒவ்வொரு தனிமனிதரும் அதற்கான முன்னெடுப்புகளைச் செயல்படுத்தினால் ‘கைம்பெண்’ எனும் வார்த்தையே அர்த்தமில்லாமல் போய்விடும். பண்டைய காலங்களில் கைம்பெண்கள் பல்வேறு சமூகக் கட்டுப்பாடுகள், ஒதுக்குதல்கள் மற்றும் மனித உரிமை மறுப்புகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களின் உணர்வுகள், விருப்பங்கள் மற்றும் வாழ்க்கைத் தேர்வுகள் பெரும்பாலும் சமூக மரபுகளால் கட்டுப்படுத்தப்பட்டன. கைம்பெண்களின் வாழ்க்கை நிலையை அன்றைய காலத்துடன் ஒப்பிட்டு நோக்கும்போது இக்கால சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. கே. கே. பிள்ளை, டாக்டர்., தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2020

2. செல்லம், வே. தி., தமிழக வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ஆகஸ்ட், 2016
3. தட்சிணாமூர்த்தி, முனைவர் அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணை பதிப்பகம், ஏப்ரல், 2021
4. புலியூர்க்கேசிகன், புறநானூறு, கௌரா பதிப்பகம், சென்னை, 2006
5. முருகேசன், சிவ., தமிழ்நாட்டில் சதி என்னும் தற்பலி வழக்கம், சந்தியா பதிப்பகம், சென்னை, 2014
6. ஜெயவீரதேவன், செ., உடன்கட்டை (ஒரு வரலாற்று ஆய்வு), பாவை பப்ளிகேசன், சென்னை, நவம்பர் 2010

**இதழ்**

1. கருப்பையா, கோ. மு., கோயில் வழிபாடு நடத்தும் கைம்பெண்கள், சிந்தனையாளன் – 11, நவம்பர் 2013
2. நேசிகன் கணேசன், தமிழர் வரலாற்றில் உடன்கட்டை (சதி) மற்றும் நவகண்டம், தமிழ் பாரம்பரிய மாதம் - மார்ச் 4, 2019
3. பெரியார், விபச்சாரம் ஒழியுமா?, பெரியார் – 28, அக்டோபர் 2022
4. ராஜேஷ்வரி, டி. எஸ்., சமூக சீர்திருத்த இயக்கம், பெண்களும் வேதாந்தங்களும், உங்கள் நூலகம், செப்டெம்பர் 2011
5. விடுதலை இராசேந்திரன், விதவைகள் சடலங்களை வெட்டி சாய்க்கும் மனுதர்ம வெறி, பெரியார் முழக்கம் – 01, ஜூலை 2012